# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1707/15 - 2011 මැයි 25 වැනි බදාදා - 2011.05.25

*1707/15 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 3/2009.*

**2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டம்**

*2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் (1) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

தவிசாளர்,
இலங்கைப் பொதுப்
பயன்பாடுகள் ஆணைக்குழு.

கொழும்பு,
2011,மே 24.

**விதிகள்**

1. இவ்விதிகள் மின்சார (பிணக்குத் தீர்வு நடவடிக்கைமுறை) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

**பாகம் I**

**பிணக்குக்கான திறந்தவர்களினால் பிணக்குகளின் தீர்வு**

2. பிணக்கொன்றைத் தீர்ப்பதற்கு விரும்புகின்ற அத்தகைய பிணக்குக்கான திறத்தவரொருவர், அந்நோக்கத்துக்காக, அப்பிணக்குக்கான மற்றைய திறத்தவருக்கு, அதனைத் தீர்ப்பதற்கான உத்தேசமொன்றுட்பட, அவர்களுக்கிடையே பிணக்கிலுள்ள கருமத்தையும், அதற்கியைபானதென அத்தகைய திறத்தவர் கருதுகின்ற எவையேனும் வேறு நிகழ்வுகளையும் எடுத்துக்கூறி எழுத்திலான வேண்டுகோளொன்றை அனுப்பலாம். அவ்வேண்டுகோளானது, அத்தகைய பிணக்கைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்வதற்கென ஒரு கூட்டத்துக்கான திகதியையும் குறித்துரைத்தலும் வேண்டும்.

3. இரண்டாம் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட வேண்டுகோள் பதிவஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டுமென்பதுடன், தொலைநகல் அல்லது மின்னஞ்சல் போன்ற வேறெவையேனும் சேர்ப்பித்தல் வழிவகைகள் பற்றித் திறத்தவர்கள் உடன்பட்டிருந்தாலொழிய, அஞ்சலிலிடப்பட்ட திகதியை உடனடுத்து அஞ்சல் ஒப்படைக்கப்படும் அடுத்தநாளன்று மற்றைய திறத்தவரினால் பெறப்பட்டுள்ளதெனக் கருதப்படுதலும் வேண்டும். வேறெவையேனும் சேர்ப்பிப்பு வழிவகைகள் பற்றித் திறத்தவர்கள் உடன்பட்டுள்ளவிடத்து, வேண்டுகோளானது, மற்றைய திறத்தவரினால் அது பெற்றுக்கொள்ளப்பட்டதென்ற ஏற்றுக்கொள்ளுதலின் மீது மட்டுமே பெறப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

4. விடயத்துக்கேற்ப, வேண்டுகோளானது பெறப்பட்ட திகதியிலிருந்து அல்லது பெறப்பட்டதாகக் கருதப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு (14) நாட்களினுள், பிணக்குக்கான திறத்தவர்கள், திறத்தவர்களிடையே உடன்பட்டுக்கொள்ளப்பட்டவாறாக வசதியான ஓர் இடத்திலும் திகதியிலும் நேரத்திலும் கூடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு கூடுவதன்மேல், பரஸ்பரமான முறையில் பிணக்குக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்த்துவைத்தலொன்றை எய்துவதற்கு எல்லா முயற்சிகளையும் எடுத்தலும் வேண்டும்.

5. தீர்த்துவைத்தலொன்றை எய்துவதற்குத் திறத்தவர்கள் இயன்றோராகவிருக்குமிடத்து, அத்தகைய தீர்த்துவைத்தல் எழுத்திலிடப்படுதல் வேண்டுமென்பதுடன், இரு திறத்தவர்களும், அத்தகைய தீர்த்துவைத்தலின் நியதிகளுக்குத் தாம் உடன்படுகின்றனரெனக் குறித்துக்காட்டி அந்த ஆவணத்தில் தமது கையொப்பங்களை இடுதலும் வேண்டும்.

6. விடயத்துக்கேற்ப, (4) ஆம் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட முதலாவது கூட்டத் திகதியிலிருந்து பதினான்கு (14) நாட்களினுள், அல்லது 3 ஆம் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட வேண்டுகோள் பெறப்பட்ட திகதியிலிருந்து அல்லது பெறப்பட்டதாகக் கருதப்பட்ட திகதியிலிருந்து முப்பது (30) நாட்களினுள், பிணக்குக்கான திறத்தவர்கள், பிணக்கைத் தீர்ப்பதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்த பின்னர் இரு திறத்தவர்களினாலும், பரஸ்பரமாக ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்த்துவைத்தலொன்றை எய்துவதற்கு இயலாதோராகவிருக்குமிடத்து, பிணக்குக்கான திறத்தவர்களுள் ஒருவர், ஆணைக்குழுவுக்கு முகவரியிட்டனுப்பப்படும் கையொப்பமிடப்பட்ட எழுத்திலான கடிதத் தொடர்பின்மூலம், பிணக்கைத் தீர்த்துவைப்பதற்கான முயற்சி வெற்றியீட்டவில்லையெனத் தெரிவித்து அதனைத் தீர்த்துவைக்குமாறு ஆணைக்குழுவிடம் கோரலாம்.

7. ஆறாம் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட எழுத்திலான கடிதத்தொடர்பு பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் :-

(அ) பிணக்குக்கான எல்லாத் திறத்தவர்களினதும் பெயர்களும் முகவரிகளும் ;

(ஆ) பிணக்குக்கு இயைபான நிகழ்வுகள் ; அத்துடன்

(இ) திறத்தவர்கள் ஒருவரோடொருவர் செய்திருக்கக்கூடிய ஏதேனும் எழுத்திலான ஒழுங்கேற்பாட்டின் பிரதிகளுடன் சேர்த்து, திறத்தவர்களினால் நாடப்படும் தீர்வு.

## பாகம் II

## ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பிணக்குகளின் தீர்வு

8. ஆறாம் விதியின் கீழ் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பிணக்கு, சட்டத்தின் 39 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட பிணக்கொன்றாகவிருக்குமிடத்தும், ஆணைக்குழுவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி அத்தகைய பிணக்கு ஒரு நீதிமன்றத்தினால் அல்லது நடுத்தீர்ப்பினூடாகத் தீர்மானிக்கப்படவேண்டியது கூடுதல் தோதானதாகவுள்ளதென முடிபு செய்யுமிடத்தும், ஆணைக்குழுவானது 7 ஆம் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட எழுத்திலான கடிதத் தொடர்பில் எந்தத் திறத்தவர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றனவோ அந்தத் திறத்தவர்களுக்கு அதன் எழுத்திலான முடிபைத் தெரிவித்தல் வேண்டும்.

9. ஆணைக்குழுவானது, 6 ஆம் விதியின் கீழ் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் பிணக்கை மத்தியஸ்தத்தினூடாகத் தீர்ப்பதற்கு முடிபுசெய்யுமிடத்து, ஆணைக்குழுவானது, அந்நோக்கத்துக்காக, (இவ்விதிகளில் ''குழாம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மூன்றாட்களைக்கொண்ட மத்தியஸ்தர்கள் குழாமொன்றை நியமித்தல் வேண்டும் ; அவர்களுள் ஒருவர் பிரதான மத்தியஸ்தராகப் பணிபுரிதல் வேண்டும். குழாமானது, பிணக்கை மத்தியஸ்தம் செய்வதிலும் தீர்ப்பதிலும், பிணக்கின் விடயப்பொருள் தொடர்பாக விசேட அறிவுவாய்ந்த அல்லது நிபுணத்துவம் வாய்ந்த எவரேனுமாளிடமிருந்து மதியுரைபெறுதலுட்பட, அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய விசாரணைகளை நடாத்துவதற்கும், அத்தகைய ஆவணங்களையும் அல்லது தகவலையும் கோருவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

10. குழாமானது, அதன்பின்னர் பிணக்கைத் தீர்ப்பதற்காக அதன் சொந்தத் தீர்மானமொன்றைச் செய்தல் வேண்டும் ; அது, எழுத்தில் வடிக்கப்பட்டு அவ்வாவணத்தின் மீது ஆணைக்குழுவின் இலச்சினையிடப்படுதலும் வேண்டும்.

11. குழாமானது, அவர்களின் முன்னருள்ள பிணக்குக்கான தீர்வொன்றை வசதிப்படுத்துவதற்கென, பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பிணக்குக்கான திறத்தவர்களுக்கும், பிணக்கைத் தீர்த்துவைக்கும் நோக்கத்துக்கு எத்திறத்தவர்களின் சமூகம் அவசியமென அது கருதுகின்றதோ அத்தகைய வேறு திறத்தவர்களுக்கும், ஒன்றில் ஒன்றாகவோ அல்லது தனித்தனியாகவோ, அறிவிப்பில் குறித்துரைக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் மத்தியஸ்த மாநாடொன்றிற்குச் சமுகமளிக்கும்படி எழுத்தில் அறிவிப்பதற்கும் ;

(ஆ) மத்தியஸ்த மாநாட்டில் சமுகமளிக்கும்படி அறிவிக்கப்பட்ட எவரேனுமாளை, பிணக்குக்கான தீர்வொன்றை எய்துவதில் உதவியளிக்கக்கூடியவாறான எவரேனும் சாட்சிக்காரர்களை அல்லது எவையேனும் ஆவணங்களைக் கொண்டுவரும்படி கோருவதற்கும் ;

(இ) பிணக்கைச் சுமுகமான முறையில் தீர்த்துவைப்பதனை எய்துவதற்கென அவசியமாகக்கூடியவாறான அத்தகைய மத்தியஸ்த மாநாடுகளைக் கூட்டுவதற்கும் ;

(ஈ) மத்தியஸ்த மாநாடு நடாத்தப்படும்போது அளிக்கப்பட்ட எல்லாச் சான்றுகளும், சமர்ப்பிக்கப்பட்ட எல்லா ஆவணங்களும் தகவல்களும், மற்றும் வெளிக்காட்டப்படுகின்ற அல்லது கலந்துரையாடப்படுகின்ற வேறெவையேனும் கருமங்களும் தொடர்பில் அந்தரங்கத்தன்மையைப் பேணுவதற்கும் ;

(உ) பிணக்குக்கான விடயப்பொருள்குறித்து விசேட அறிவுவாய்ந்த அல்லது நிபுணத்துவம்வாய்ந்த எவரேனுமாளின் மதியுரை, தீர்த்துவைத்தலொன்றை எய்துவதில் அவசியமாகவுள்ளதென்றும் உதவியாகவுள்ளதென்றும் ஆணைக்குழு கருதுகின்றவிடத்து அத்தகைய மதியுரையைப் பெறுவதற்கும் ;

(ஊ) இருதிறத்தவர்களினாலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவுள்ள சுமுகமான தீர்த்துவைத்தலொன்றைப் பிணக்குக்கான திறத்தவர்கள் எய்துவதனைச் செய்விக்கும்படி முயற்சிப்பதற்கும் ; அத்துடன்

(எ) 6 ஆம் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆற்றுப்படுத்துகைத் திகதியிலிருந்து தொண்ணூறு (90) நாட்களினுள் அதன் வழக்கு நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்து பிணக்குக்கான தீர்த்துவைத்தலொன்றை எய்துவதற்கும்.

12. மத்தியஸ்தத்தின் மூலம் தீர்வுக்காகக் கொணரப்படும் பிணக்குக்கான ஒவ்வொரு திறத்தவரும் பின்வருவனவற்றைச் செய்தல் அவரது கடமையாதல் வேண்டும் :-

(அ) அத்தகைய பிணக்குக்கான தீர்த்துவைத்தலொன்றை எய்துவதற்குப் பிணக்குக்கான திறத்தவர்களை வசதிப்படுத்துமுகமாக, குழாத்துக்கு இயைபானவையும் அவசியமானவையுமான எல்லாக் கருமங்களையும் முழுமையாகவும் நேர்மையாகவும் வெளிப்படுத்துதலும் ; அத்துடன்

(ஆ) ஒரு மத்தியஸ்த மாநாட்டில் வெளிப்படுத்தப்பட்டதும் அல்லது கலந்துரையாடப்பட்டதும், அந்தரங்கத் தன்மையினதுமான ஏதேனும் தகவலை வெளிக்காட்டாதிருத்தலும் ;

13. மத்தியஸ்த மாநாடு முடிவுற்றதன்மேல், பிணக்குக்கான திறத்தவர்கள் விடயத்துக்கேற்ப :-

(அ) தீர்த்துவைத்தலொன்றுக்கு உடன்படலாம். அவ்விடயத்தில் தீர்த்துவைத்தலின் நியதிகள் எழுத்தில் வடிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், குழாத்தின் உறுப்பினர்களினாலும் பிணக்குக்கான எல்லாத் திறத்தவர்களினாலும் கையொப்பமிடப்படுதலும் வேண்டும். ஆணைக்குழுவின் இலச்சினை, அதன்மேல், தீர்த்துவைத்தலைக் கொண்டுள்ள ஆவணத்தின்மீது இடப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பிரதியொன்று பிணக்குக்கான திறத்தவர்களுள் ஒவ்வொருவருக்கும் உடனடியாக வழங்கப்படுதலும் வேண்டும் ; அல்லது

(ஆ) தீர்த்துவைத்தலொன்றுக்கு உடன்படாதிருக்கலாம் ; அவ்விடயத்தில் குழாத்தின் உறுப்பினர்கள், அத்தகைய திறத்தவர்களின் முன்னிலையில், 10 ஆம் விதியின் கீழ் ஆக்கப்பட்ட அதன் தீர்மானத்தைக் கொண்டுள்ள இலச்சினையிடப்பட்ட ஆவணத்தைத் திறத்தலும், அப்பிணக்குத் தொடர்பில் ஆணைக்குழுவினால் எய்தப்பட்ட தீர்வாக அதனைத் திறத்தவர்களுக்குச் சமர்ப்பித்தலும், அத்துடன் பிணக்குக்கான திறத்தவர்களுள் ஒவ்வொருவருக்கும் அதன் பிரதியொன்றை வழங்குதலும் வேண்டும்.

14. பிணக்குக்கான திறத்தவர்கள், தமது பிணக்குக்கான தீர்வாக 13 ஆம் விதியின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக ஆணைக்குழுவினால் எய்தப்பட்ட தீர்வை ஏற்றுக்கொள்வதற்கு விரும்பாதவிடத்து,ஆணைக்குழுவானது, சட்டத்தின் 39 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி, விடயத்துக்கேற்ப, ஒன்றில் தோதான நீதிமன்றமொன்றின்மூலம் அல்லது நடுத்தீர்ப்பினூடாகத் தீர்மானிக்கப்படுவதற்காக அத்தகைய பிணக்கை ஆற்றுப்படுத்துவதற்கு அதிகாரமுடையதாதல் வேண்டும்.

15. ஆற்றுப்படுத்துகைகளும், கடிதத்தொடர்புகளும் மற்றும் சமர்ப்பணங்களும், பதிவஞ்சல், தொலைநகல், மின்னஞ்சல் என்பனமூலம் அல்லது ஆணைக்குழுவினால் கிடைக்கக்கூடியதாக்கப்படும் வேறெவையேனும் இலத்திரனியல் தொடர்புளினூடாக ஆணைக்குழுவுக்குச் செய்யப்படலாம். தொலைநகல், மின்னஞ்சல் அல்லது இலத்திரனியற் கடிதத்தொடர்பு என்பவற்றின் விடயத்தில், ஆற்றுப்படுத்துகை, கடிதத்தொடர்பு அல்லது சமர்ப்பணம், பெறுபவரினால் அதன் பெறுகைபற்றிய ஏற்றுக்கொள்ளுதலின் மீது மட்டுமே பெறப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

16. ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பிணக்கொன்று இவ்விதிகளின்கீழ் மத்தியஸ்த நடைமுறைமூலம் தீர்க்கப்படுமிடத்து, ஆணைக்குழுவானது, அதுபற்றிய எல்லாக் கலந்தாராய்வுகளும் முடிவுற்றதன்மேல், ஆணைக்குழுவின் செலவுகளாக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான அத்தகைய தொகையையும் பிணக்குக்கான திறத்தவர்களினால் செலுத்தப்படவேண்டிய தொகையையும் சம விகிதத்தில் இறுக்கலாம்.

17. இவ்விதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய :-

"சட்டம்" என்பது, 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டம் என்று பொருளாகும் ;

"ஆணைக்குழு" என்பது, 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு என்று பொருளாகும் ; அத்துடன்

"பிணக்கு" என்பது, சட்டத்தின் 39 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறானதும், மின்சாரத்தை வழங்குதல் அல்லது பயன்படுத்துதல் சம்பந்தமாக எழுகின்றதுமான ஒரு பிணக்கு என்று பொருளாகும்.

06- 179

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.